TAMIL MURASU 25 SEP 10

ஈஷா யோகா மையம் சார்பில்

# மதுரையில் நாளை பசுமை இயக்கம் துவக்க விழா

மதுரை, செப். 25-

ஈஷா யோகா மையம் சார்பில் மதுரையில் நாளை (செப்.26) பசுமை இயக்கத்தை யோகா மைய சத்குரு ஜகி வாசுதேவ் துவக்கி வைக்கிறார் என தென் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மொத்தம் 11.4 கோடி மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் திட்டத்தை ஈஷா யோகா மையம் நிறைவேற்றி வருகிறது. இத்திட்டம் 2004ல் துவங்கப்பட்டது. ஒரே நாளில் 8 லட்சம் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கப்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் 16 இடங்களில் ஆனந்த அலை என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 25 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. 2015ம் ஆண்டிற்குள் மரக்கன்றுகள் நட்டு முடிக்கப்படும். தன்னார்வ தொண்டர்கள், வீடுகளில் மரக்கன்றுகளை வளர்த்து அதனை மையம் மூலம் நட கொடுக்கின்றனர். மதுரையில் 1 லட்சம் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மரம் வளர்ப்பு திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் மதுரை பசுமை இயக்கம் நாளை (செப்.26) துவக்கப்படுகிறது. மதுரை தமுக்கம் மைதானத்தில் மாலை 6 மணிக்கு நடக்கும் நிகழ்ச்சியில் மதுரை பசுமை இயக்கத்தை சத்குரு ஜகி வாசுதேவ் துவக்கி வைக்கிறார். பின் அவரது அருளுரை நடக்கிறது' என்றார்.